I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.14(L.W.25)
SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| Name | : | Dr. Sureka |
| Father Name | : | |
| Occupation | : | Doctor, Vellore Medical College and Hospital, Addukkamparai, Vellore |
| Taluk | : | |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.02.2026

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்: 12.05 p.m**

**முதல் விசாரணை—**

நான் வேலூர் அடுக்கம்பாறையில் உள்ள அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணி செய்து வருகிறேன். என்னை சாட்சியம் அளிக்க மருத்துவ கல்லூரி முதல்வர் மருத்துவர் ரோகினி தேவி என்பவர் என்னை பரிந்துரை செய்ததன் படி நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னிடம் கொடுக்கப்பட்டுள்ள விபத்து பதிவேடு, அதில் மருத்துவர் நமச்சிவாயம் என்பவரால் வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் 21.03.2006 அன்று மாலை 07.30 மணியளவில் பதிவு செய்யப்பட்டதாகும். அதில் ஸ்ரீனிவாசன் காவல் உதவி ஆய்வாளர் த/பெ. ராமன், C2AR Police, வேலூர் என்பவரை வேலூர் துணை காவல் கண்காணிப்பாளர் திரு.சரவணன் என்பவர் குறிப்பாணை எண். 7/HOS/Bagayam PS/06 dated 21.03.2006 பாகாயம் காவல் நிலையம் படி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்திருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அவர் 21.03.2006 மாலை 06.00 மணியளவில் சிவநாதபுரம் கையிலாய மலை அருகே சில பழங்குடி மக்கள் அவர் மீது நெருப்பு தாக்கல் செய்யும்போது அவர்களிடமிருந்து தப்பிக்க ஓடும்போது கீழே விழுந்ததாக

குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் அவருக்கு வலது பக்கம் முழங்கையில் மற்றும் வலது கால் முழங்காலில் காயம் ஏற்பட்டதாக கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவரை பரிசோதித்தபோது சுயநினைவுடன் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவருடைய இருதய துடிப்பு, சுவாச மூச்சு இயல்பாக இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள்.

1–5x5 cm அளவிலான சிராய்ப்பு காயம் வலது பக்க முழங்கையில் வெளிபுறமாக காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2–வலது பக்க முழங்காலில் தொடுவலி இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்த பிறகு உள் நோயாளியாக அனுமதித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி ஸ்ரீனிவாசன் என்பவருக்கு பதிவு செய்யப்பட்டு சிகிச்சை அளித்ததற்கான விபத்து பதிவேடு **அ.சா.ஆ. 13** ஆகும்.

அந்தோணிராஜ் வயது 25, ஆண்,PC No.699, த/பெ.அருள் திரவியம், 11/7, D Block, AR Police Quarters, Vellore என்பவரை வேலூர் துணை காவல் கண்காணிப்பாளர் திரு.சரவணன் என்பவர் Memo No.6/HOS/Bagayam PS/06 dated 21.03.2006 படி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அதில் அவர் 21.03.2006 மாலை 06.00 மணியளவில் சிவநாதபுரம் மலையில் அடையாளம் தெரியாத சில நபர்கள் கத்தியால் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவரை பரிசோதனை செய்தபோது அவர் சுயநினைவுடன் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது உள்ளுறுப்பு மண்டலங்கள் இயல்பாக இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டள்ளது.

1–7x0.2 cmx0.2 cm அளவிலான மேல்புற கிழிந்த காயம் வலது கையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது

2–6x0.2x0.2 cm அளவிலான வெட்டு காயம் நெஞ்சு பகுதியில் காணப்பட்டதாக

குறிப்பிடப்பட்டுள்ளது.

3–5x0.2x0.2 cm அளவிலான மேற்புற வெட்டு காயம் வலது பக்க முன் கையில் காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

4–6 cm அளவிலான 2 மேற்புற கன்றிய காயம் இடது பக்க முன் கையில் காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்த பிறகு உள்நோயாளியாக அனுமதித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று காய சான்றிதழ் 15.04.2006 அன்று வழங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ. 14** ஆகும்.

21.03.2006 அன்று மாலை 07.10 மணியளவில் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டில் மணி (எ) நடுபையன் வயது 35, ஆண், த/பெ. பாப்பைய்யன், எதிரி கொல்லை, அல்லேரி மலை என்பவரை வேலூர் காவல் துணை கண்காணிப்பாளர் திரு. சரவணன் என்பவர் Memo NO. 8/HOS/Bagayam PS/06 dated 21.03.2006 பாகாயம் காவல் நிலையம் படி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அதில் அவர் 21.03.2006 மாலை 06.00 மணியளவில் சிவநாதபுரம் கையிலாய மலை அருகில் வேலூர் துணை காவல் கண்காணிப்பாளர் சுட்டதால் காயம் அடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருடைய உள்ளுறுப்பு மண்டலங்கள் இயல்பாக இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1– குண்டு தாக்குதல் உட்புகு காயம் வலது பக்க காலில் முழங்காலுக்கு கீழ் காணப்பட்டதாகவும் அதில் ரத்தம் கசிந்து காணப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. குண்டு வெளி புகு காயம் காணப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்த பின்பு வலது காலுக்கு X ray எடுக்க கோரியும் மேல் சிகிச்சைக்காகவும் உள் நோயாளியாக

அனுமதித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த விபத்து பிதிவேடு **அ.சா.ஆ. 15** ஆகும்.

<u>4 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

1 மற்றும் 2 வது எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு எதிரிகள் போன் மூலம் தெரிவித்தாக தெரிவித்தார். இது 2018 வழக்கு என்பதால் அவகாசம் இல்லை என்பதால் அவர் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்யும்படி அறிவுறுத்தப்படுகிறது.

1 மற்றும் 2வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்படுகிறது. நேரம் –12.30 p.m

**1 மற்றும் 2வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் நேரடியாக காயம் பட்டவர்களுக்கு மருத்துவம் பார்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆவணங்கள் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். ஸ்ரீனிவாசன் மற்றும் அந்தோணிராஜ் ஆகியோர்களுக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டில் அடையாளம் தெரியாத நபர்கள் என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு குறிப்பிடவில்லை, பழங்குடி மக்கள் என்று தான் உள்ளது. அடையாளம் தெரிந்தவர் தெரியாதவர் என்று மருத்துவர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொதுவாக தெரிந்தவர் தெரியாதவர் என்று குறிப்பிட வேண்டும் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தை நிர்ணயம் செய்யதான் இவ்வாறு பழங்குடி மக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கள் அனைத்தும் போலீசாருக்கு பவ்வியப்பட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்: 01.05 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI Date: 2026.02.20 18:19:10 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்